COUNT US IN 2020

There's Power In Being Counted

ASIAN AMERICANS ADVANCING JUSTICE

COUNTUSIN2020.ORG

# 2020 மக்கள் தொகை கணக்கெடுப்பு உங்கள் சமூகத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது

## நிகழ்காலத்தைப் பாதுகாக்கவும், வருங்காலத்தில் முதலீடு செய்யவும்

மத்திய அரசின் நிதியிலிருந்து **$1.5 டிரில்லியனுக்கும்** மேற்பட்ட தொகை மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டே ஒவ்வொரு ஆண்டும் சமூகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இதன் மூலம் உங்கள் குடும்பமும் சமூகமும் செழிப்பாக வளர்வதை உறுதிசெய்ய உதவுகிறது.

*இது உங்கள் சமூகத்திற்கு எவ்வாறு பயனளிக்கிறது?*




## உங்கள் சமூகத்திற்கான வளங்களைப் பெறுங்கள்

உங்கள் சமூகத்தில் வசிக்கும் ஒவ்வொரு நபரும் கணக்கில் சேர்க்கப்படுவதன் மூலம், மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியை நீங்கள் பெற முடியும். மறுபுறம், மக்கள் தொகை கணக்கெடுப்பில் பங்கேற்காத ஒவ்வொரு நபரும் உங்கள் சமூகத்திற்கு ஆயிரக்கணக்கான டாலர்கள் செலவை ஆண்டுதோறும் ஏற்படுத்துகிறார். மக்கள் தொகை கணக்கெடுப்பு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே மேற்கொள்ளப்படுவதால், 2030 வரை ஒவ்வொரு ஆண்டும் இந்த இழப்பு தொடர்ந்து நிகழும். இதனால் பெருமளவு வளம் இழப்பு ஏற்படும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பில் பங்கேற்பதன் மூலம், மத்திய நிதியிலிருந்து உங்கள் சமூகத்திற்குத் தேவையான நியாயமான பங்கை உங்களால் கோரிப் பெற முடியும். உங்கள் சமூகத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதியை இழந்துவிடாதீர்கள்.

## உங்கள் சமூகம் கண்டுக்கொள்ளப்படுவதை உறுதிசெய்யுங்கள்

மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகள் மத்திய அரசின் நிதியைத் தீர்மானிப்பதற்கு மட்டும்மல்ல, வளங்களை எங்கு முதலீடு செய்வது என முடிவெடுப்பவர்களுக்குத் தெரிவிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. திட்டமிடல் மற்றும் முதலீடு செய்தலைத் தீர்மானிப்பதில் மக்கள் தொகைத் தரவுகள் உங்கள் சமூகத்தின் மீது ஒரு வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும்.

மக்கள் தொகை சரியாக கணக்கெடுக்கப்படுவதால்,

- உள்ளூர் பள்ளி மாவட்டங்கள் எங்கு புதிய பள்ளிகள் கட்டுவது அல்லது தற்போது உள்ளவற்றை விரிவுபடுத்துவது என்பதை அறிந்துகொள்ள முடியும்,
- உள்ளூர் அரசாங்கங்கள் வீடமைப்புத் தேவைகளுக்கு எவ்வாறு திட்டமிடுவது என்பதை அறிந்துகொள்ள முடியும்,
- மருத்துவ / சுகாதார சேவை அளிப்போர் தங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கு என்ன வகையான பராமரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி அறிந்துகொள்ள முடியும்,
- வணிக நிறுவனங்கள் புதிய கடைகளையும் சேவைகளையும் எங்கு திறப்பது என்பதை அறிந்துகொள்ள உதவும், மற்றும்
- சமூகத்தினரின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை வரைவதற்கும் செயல்படுத்துவதற்கும் தேவையான தரவுகளை ஆர்வலர்கள் பெறுவார்கள்.

## அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற கணக்கெடுப்பில் பங்கேற்கவும்

அரசாங்கத்தில் உங்கள் குரல் கேட்கப் படுவதை

உறுதிசெய்ய மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகள்

முக்கியமானவை.





தரவுகள் இவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றன:

- யு.எஸ். பிரதிநிதிகள் அவையில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் எத்தனை இடங்கள் உள்ளன என்பதைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இது உங்கள் சமூகத்திற்கான அரசியல் அதிகாரமாக மாறுகிறது.
- அரசாங்கத்தின் அனைத்து நிலைகளிலும் அரசியல் மாவட்ட வரைபடங்களை மறுவரையறை செய்யவும்.
- இன அடிப்படையில் நிகழும் பாகுபாடுகளிலிருந்து வாக்காளர்களைப் பாதுகாக்கவும்.
- அதிகார வரம்புகள் வாக்காளர்களுக்கு புரியும் மொழியிலேயே உதவி வழங்குவதை உறுதிசெய்யவும் பயன்படுத்தப்படுகின்றது.

## உங்கள் ஒவ்வொரு பதிலும் உங்கள் சமூகத்திற்கு மிக முக்கியம்

குறிப்பிட்ட சில சமூகங்களில் கணக்கெடுப்பு நடத்துவது கடினமானதாக இருக்கிறது --

அதாவது, இந்த சமூகங்களில், மக்களில் பல பேர் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பதிலளிப்பது இல்லை. இது மக்கள் தொகை கணக்கெடுப்பில் விகிதாச்சார அடிப்படையில் ***எண்ணிக்கைக் குறைவுக்கு*** வழிவகுக்கிறது-
--அதாவது, இங்கு மக்கள் தொகை கணக்கெடுப்பில் உள்ள மக்களின் எண்ணிக்கை சமூகத்தில் வசிக்கும் உண்மையான மக்கள் எண்ணிக்கையை விடக் குறைவாக இருக்கிறது. இன மற்றும் இனக்குழு சிறுபான்மையினர், வாடகை வீட்டில் குடியிருப்போர், ஆங்கிலப் புலமை குறைவாக உள்ளவர்கள், பிற நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள், சிறிய குழந்தைகள் ஆகியோர் வரலாற்று ரீதியாக கணக்கிட கடினமாக உள்ள சமூகங்களில் உள்ளடங்குவர்.




அதிகமான ஆசிய அமெரிக்கர்கள், பூர்வீக ஹவாய் மற்றும் பசிபிக் தீவினர் கணக்கெடுப்பதற்கு கடினமாக உள்ள சவால்கள் நிறைந்த பகுதிகளில் வாழ்கின்றனர். அங்கு அதிக அளவில் ஏழ்மையும் வேலையின்மையும், நிலையான மற்றும் மலிவு விலை வீடுகள் பற்றாக்குறையும், குறைவான கல்வி நிலை மற்றும் அதிக மொழித் தடையும் காணப்படுகின்றன. மக்கள் தொகை குறைத்துக் கணக்கிடப்பட்டால் இம்மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவைப்படுகின்ற நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்ய முடியாமல் போய்விடும். 2020-இல் நமது சமூகங்கள் முழுமையாக கணக்கிடப்படுவதையும், அடுத்த பத்தாண்டுகளுக்குத் தேவையான நியாயமான பங்கை அவர்கள் பெறுவதையும் உறுதிசெய்ய மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஒவ்வொரு நபரின் பங்கேற்பும் மிக முக்கியமானதாகும்.

*மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றிய கூடுதல் தகவல்களைக் காண,*
*www.countusin2020.org/resources*-ஐப் பார்வையிடுங்கள